## 16. தலைப்பு 14 – சட்டமா அதிபர் திணைக்களம்

---

### 16.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் மேலும் இரண்டு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை. |
| (ii) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பொறுப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |

### 16.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

#### 16.2.1 உள்ளகக் கணக்காய்வு

---

நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின்போது உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 16.2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---

திணைக்களத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 16.3 வருமானக் கணக்குகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 20.03.02.11 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வரும் வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 126,283,414 கூட்டுத் தொகையான வருமானம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை வருமானத்தில் ரூபா 57,557,165 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாதிருந்தது.

## 16.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

01401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின்போது 01 வருடம் முதல் 8 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,213,928 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவிடும் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 16.5 செயலாற்றல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் திணைக்களத்தின் 7 பிரிவுகளின் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

| பிரிவு | 2014 ஆம் ஆண்டின்போது | | | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | திறக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | குற்றப்பத்திரம் அனுப்பிய கோவைகளின் எண்ணிக்கை | ஆலோசனை வழங்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | |
| சிவில் பிரிவு | 2686 | - | - | - | 118 |
| குற்றவியல் வழக்குபிரிவு | 5496 | 2210 | 1304 | 870 | 3970 |
| அரசாங்க சட்டத்தரணிப் பிரிவு | 128 | - | - | - | 1712 |
| உயர் நீதிமன்ற பிரிவு | 392 | - | - | - | 680 |
| கூட்டுத்தாபன | 1885 | - | - | - | 1751 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரிவு | | | | | |
| பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு | 4428 | 739 | 540 | 909 | 2188 |
| பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவு | 530 | - | - | - | 220 |
| | ------------- | ------------------ | ------------------- | --------------- | --------------- |
| மொத்தம் | 15545 | 2949 | 1844 | 1779 | 10639 |
| | ===== | ===== | ==== | ===== | ===== |

சிவில் பிரிவின் மூலம் திறக்கப்பட்ட கோவைகளில் அதிக எண்ணிக்கையானவை அரசாங்க சட்டத்தரணிகள் பிரிவினாலும் நடவடிக்கைக்கு உள்ளாகியிருந்தன.

## 16.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 271 | 173 | 98 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 10 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 166 | 97 | 69 |
| (iv) | ஆரம்ப நிலை | 233 | 207 | 26 |
| (v) | ஏனையவை | 130 | - | 130 |
| | | ----------- | -------- | -------- |
| | மொத்தம் | 812 | 487 | 325 |
| | | ==== | ===== | ===== |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 325 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. கட்டிட இட வசதி இன்மையினால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள பதவிகளில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் செய்யமுடியாதென சட்டமா அதிபர் 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதியன்று கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.